விஜயபாரதம்
மின்னனு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 6 ஞாயிறு 22.08.2021 மலர் - 2, இதழ் - 138

# தலிபானும் சீனாவும்

தலிபான்கள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றிய உடனே அவர்களுக்கு ஆதரவளித்த நாடுகளில் குறிப்பிடத் தக்கவையாக தலிபான்களை தூண்டிவிட்டு அனைத்து வகையிலும் ஆதரவளித்த பாகிஸ்தானும், பாகிஸ்தானின் பின்புலமாக செயல்பட்ட சீனாவும்தான். இவற்றைத்தவிர, துருக்கி, ரஷ்யா போன்ற வேறு சில நாடுகளும் உண்டு. ஆப்கானிஸ்தானுடன் 'நட்பு மற்றும் கூட்டுறவு' உறவுகளை ஆழமாக்கும் வாய்ப்பை 'வரவேற்கிறோம்' என்று சீன அரசு கூறியது.

ஆனால், உண்மையில் தலிபான்களுக்கும் சீனாவுக்கும் ஏழாம் பொருத்தம். ஏனெனில் தன் நாட்டில் உள்ள உய்குர் முஸ்லிம்களை சீனா எப்படி கொடுமைப்படுத்துகிறது என்பது தலிபான்களுக்கு நன்றாகவே தெரியும். சீனாஅவுக்கு எதிரான முஸ்லிம்களின் பயங்கரவாத இயக்கமான கிழக்கு துர்கஸ்தான் இஸ்லாமிய இயக்கம் (இ.டி.ஐ.எம்), தலிபான்களின் ஆதரவில் ஆப்கானிஸ்தானில் இருந்து செயல்படுவது சீனாவுக்கும் நன்றாகவே தெரியும். ஆனாலும் இவர்கள் ஒன்றிணைவதன் பின்னணி மதமோ, கொள்கையோ அல்ல. முழுக்க முழுக்க வியாபாரம் மட்டுமே. ஆப்கனில் உள்ள 300 லட்சம் கோடி டாலர்கள் மதிப்பிலான இயற்கை கனிம வளங்கள், அரிய கனிமங்கள்தான் இதற்கு காரணமாக கூறப்படுகிறது. இதனை வெட்டி எடுத்து கொழிக்கவே, சீனா, தலிபான்களை ஆதரிக்கிறது. சீனா போன்ற நாடுகளின் உதவி இல்லாமல் தலிபான்களால் இதனை எடுக்க முடியாது, நிதி இல்லாமல் நாட்டை நிர்வகிக்க முடியாது என்பது நிதர்சனம்.





# இந்து முன்னணி ஆர்ப்பாட்டம்



அச்சிறுப்பாக்கம் சிவன் மலையில் கிறிஸ்தவர்களின் ஆக்கிரமிப்பை அகற்ற கோரிய உயர்நீதிமன்ற தீர்ப்பை உடனடியாக அமல்படுத்தக் வேண்டி இந்து முன்னணியினர் 15 இடங்களில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தடுப்பூசியில் பாரதம் சாதனை




பாரதத்திலேயே உருவாக்கப்பட்ட முதல் கொரோனா தடுப்பூசி கோவேக்சின். அதற்குப்பிறகு முழுவதும் பாரதத்திலேயே தயாரான மற்றொரு கொரோனா தடுப்பூசியான சைகோவ்டி தடுப்பூசிக்கு மத்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு ஆணையம், அவசரகால பயன்பாடு அடிப்படையில் பயன்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனை சைடஸ் கேடிலா நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. 66.6 சதவீத செயல் திறன் கொண்ட இந்த தடுப்பூசி டி.என்.ஏ. அடிப்படையில் உருவாக்கப்பட்ட உலகிலேயே முதன் தடுப்பூசியாகும். இந்த தடுப்பூசியை 12 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது பாரதத்தின் ஆத்மநிர்பர் திட்டத்தில் மற்றொரு மைல்கல்.

# வேதபாராயண வகுப்புத் துவக்கம்



விஜயபாரதம்

மதுரை ஆர்.எஸ்.எஸ் அலுவலகத்தில் ஸ்ரீகுருஜி சேவாசங்கம் சார்பில் வேதபாராயண வகுப்புத் துவக்க விழா மற்றும் மஹாகணபதி யாகம் நடைபெற்றது. மதுரை சிவஸ்ரீ அகோர சிவகணேஷ், மங்களமுருகன் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

# விஜயபாரதம் ரக்ஷாபந்தன் விழா

விஜயபாரதம் அலுவலகத்தில் ரக்ஷாபந்தன் திருவிழா, விஜயபாரதம் பதிப்பாளர் எம்.என். சுந்தர் தலைமையில் நேற்று எளிமையாக நடைபெற்றது. இதில் விவேகானந்தன் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் ஏ.பி.ஜி.பி. சிறப்புரையாற்றினார். பசுபதி வடதமிழக மாநில செயலாளர் ஏ.பி.ஜி.பி, சண்முகம் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.



விஜயபாரதம்



# கருப்புசாமி பிரதிஷ்டை

விஜயபாரதம்

வனவாசி சேவா கேந்திரம் தமிழ்நாடு சார்பாக சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையம் வட்டம் கருமந்துறை சரஸ்வதி வித்யா மந்திர் வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ நம்பிக்கை விநாயகர் மகாகும்பாபிஷேகம், ஸ்ரீ கருப்பசாமி பிரதிஷ்டை விழா, கோபூஜை, கணபதி ஹோமம் உள்ளிட்டவை வரும் 26082021 வியாழன் அன்று காலை 09:30 மணி முதல் 10:30 மணிக்குள் நடைபெறுகிறது.

# வி.ஹெச்.பி. கோரிக்கை



விஜயபாரதம்

தலிபான்களால் ஆக்கிரமிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானில் உள்ள அனைத்து வெளிநாடு வாழ் பாரதத்தினர், அங்கு மீதமுள்ள ஹிந்து சீக்கிய சமூகத்தை சேர்ந்த பூர்வகுடி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு எடுக்க வேண்டும். தற்போது அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை என்றாலும், இவர்கள் அனைவரும் பாரதத்திற்கு பாதுகாப்பாக வரும்வரை அவர்களையும் அவர்களின் உடமைகளையும் பாதுகாக்கத் தேவையான தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது தற்போதைய அவசர தேவை. பாகிஸ்தானில் இருந்து நாடுகடத்தப்பட்ட லட்சக்கணக்கான ஹிந்துக்களின் சேவையில் விஷ்வ ஹிந்து பரிஷத் பல ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளது. அதேபோல, ஆப்கானிஸ்தானை சேர்ந்த ஹிந்து சீக்கிய சகோதரர்களுக்கும் நாங்கள் அனைத்து வகையிலும் உதவுவோம்' என விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் மத்திய பொதுச் செயலாளர் மிலிந்த் பராண்டே தெரிவித்துள்ளார்.

# சேலத்தில் கோயில் சிலைகள் உடைப்பு

தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு ஹிந்து கோவில்கள் மீதான தாக்குதல்கள், கோவில் இடிப்புகள் தொடர்கதையாகி வருகின்றன. இந்நிலையில், சேலம் மாவட்டம் கன்னங்குறிச்சி ஆத்துக்காடு பகுதியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் கோவிலில் உள்ள நவக்கிரக சிலைகளில் கேது, சூரியன், புதன் உள்ளிட்ட 5 சிலைகள் உடைக்கப்பட்டு இருந்தது. இது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. விசாரணையில், வேம்படிதாளம் பகுதியை சேர்ந்த சதீஷ் என்பவர் சாமி சிலைகளை உடைத்தது தெரியவந்தது. சதீஷ் நீண்ட நாட்களாக திருமணம் ஆகாத விரக்தியில் இருந்ததால் கோவில் சிலைகளை உடைத்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. அவர், உண்மையில் திருமணம் ஆகாத விரக்தியில் சிலைகளை உடைத்தாரா அல்லது மாற்று மதத்தினரின் தூண்டுதலினால் உடைத்தாரா என்று பொதுமக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். எனவே, இது குறித்து தீர விசாரிக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.



விஜயபாரதம்

# நாதஸ்வர வித்வான் உதாசீனம்


விஜயபாரதம்

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் நாதஸ்வர வித்வான் சரவணன் என்பவர் கடந்த 19 ஆண்டுகளாக காந்திமதி அம்மன் சன்னிதிக்கு நாதஸ்வரம் வாசிக்க தற்காலிக பணியாளராக நியமிக்கப்பட்டார். மாதம் வெறும் 1,500 ரூபாய்தான் சம்பளம். அதையும் டி.வி.எஸ் நிறுவனம்தான் வழங்கியது. கோவிலுக்கு இரு நாதஸ்வர வித்வான்கள் இருக்க வேண்டும். அதனால், சமீபத்தில் இன்னொருவரை நியமிக்க ஆட்கள் தேடினர். அதற்காக சரவணன் விண்ணப்பித்தார். ஆனால் வயதை காரனம் காட்டி அவரது விண்ணப்பத்தை கோவில் நிர்வாகம் மறுத்து விட்டது. அதில் சுரேஷ் என்பவரை நியமித்தது. மேலும், இந்த விஷயத்தில் அவருக்கு உதவ முடியாது என்றும் கைவிரித்துவிட்டது.

# யார் கொடுத்த அதிகாரம் இது?

அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகராக்கும் திட்டத்தை, ஸ்ரீ வில்லிபுத்துார் ஆண்டாள் கோவில், அதன் துணை கோவில்களில் செயல்படுத்த கூடாது. ஸ்ரீ வில்லிபுத்துார் ஆண்டாள் நாச்சியார் கோவிலில், காலம் காலமாக அர்ச்சகர் அரையர் சேவை, குறிப்பிட்ட சிலரால், நியம நிஷ்டையுடன், எவ்வித பிரதிபலனும் இல்லாத கைங்கர்யமாக நிறைவேற்றப்படுகிறது. இந்த தேவஸ்தானத்துக்குள் வரும் அனைத்து கோவில்களிலும், மடப்பள்ளியில் சாமிக்கு தளிகை செய்யும் பணியிலும், சம்பந்தமே இல்லாதவர்களை நியமிப்பது சரியில்லை. அனுபவமும், தியாக உணர்வும் படைத்தவர்கள் காலம் காலமாக செய்து வரும் இந்த பணியை, யாரோ ஒருவர் திடீரென பிடுங்கி செய்ய துவங்கினால், அது தெய்வத்தையே இழிவுபடுத்தும் செயல். இதை அனுமதிக்க முடியாது. உச்ச நீதிமன்ற தீர்ப்பையும், அரசியல் சட்டத்தையும் மீறி செயல்பட, தி.மு.க அரசுக்கு யாரும் அதிகாரம் தரவில்லை. எனவே, ஸ்ரீ வில்லிபுத்துார் ஆண்டாள் கோவில், அதன் துணை கோவில்களில் இதை செய்ய விட மாட்டோம். என்று அனைத்து இந்திய ஹிந்து சமுதாய கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் ராமசுப்பு கடிதம் எழுதியுள்ளதாக தெரிவித்துள்ளார்.


விஜயபாரதம்

# ஏ.பி.வி.பி.யின் சுதந்திர தின கொண்டாட்டம்




விஜயபாரதம்

பாரதத்தின் 75வது சுதந்திர தின கொண்டாட்டத்தை ஒட்டி, அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் (ஏ.பி.வி.பி) அமைப்பு "ஏக் கான், ஏக் திரங்கா" என்ற பிரச்சாரத்தை தேசம் முழுவதும் முன்னெடுத்தது. ஆர்.எஸ்.எஸ் பொதுச் செயலாளர் தத்தாத்ரேயா ஹோசபாலே, போபாலில் இந்த பிரச்சாரத்தை துவக்கி வைத்தார்.

இந்த கொண்டாட்டத்தில் தேசம் முழுவதும் 76,643 கிராமங்கள், 23,887 காலனிப் பகுதிகள் உட்பட சுமார் 1,09,400 இடங்களில் தேசியக் கொடியை ஏற்றும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து 20,41,636 மக்கள் பங்கேற்றனர். இக்கொண்டாட்டம் தமிழகத்தின் கன்னியாகுமரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள், மணிப்பூரின் மொய்ராங், ஜம்மு காஷ்மீரின் பாரமுல்லா, ஒடிசாவின் மல்கான்கிரி என தேசத்தின் அனைத்து எல்லைப்புறப் பகுதிகள்வரை மக்களிடம் கொண்டு செல்லப்பட்டது.

இதைத்தவிர, நம் நாட்டு மக்களிடையே தேசபக்தி உணர்வை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு, சுதந்திர போராட்ட வீரர் தேசியக்கொடியை ஏற்றுதல், 5,000 பேர் இணைந்து வெகுஜன தேசிய கீதம் இசைத்தல், அறியப்படாத சுதந்திரப் போராட்ட வீரர்களை குறித்து எடுத்துக் கூறுதல், ஊர்வலங்கள், பாரத மாதா பூஜை, கலாச்சார நிகழ்ச்சிகள், போட்டிகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

# ஞானவாபி மசூதியில் பூஜைக்கு மனு



விஜயபாரதம்

முகலாய பேரரசின் கொடுமையான அரசர்களில் ஒருவரான ஔரங்கசீப், காசி விஸ்வநாதர் கோயிலை இடித்து அங்கு ஞானவாபி மசூதியை எழுப்பியுள்ளார். அந்த சர்ச்சைக்குரிய மசூதியில், இன்னமும் ஸ்ரீ கௌரி சங்கர், வினாயகர், ஸ்ரீ மகா காலேஷ்வர், ஸ்ரீ மகேஸ்வர், ஸ்ரீ தேவி சிருங்கார் கௌரி, நந்தி உள்ளிட்ட தெய்வ சிலைகள் உள்ளன. அதனை பக்தர்கள் தரிசனம் செய்யவும் பூஜை சடங்குகள் செய்யவும் ஹிந்துக்களுக்கு உரிமை உண்டு. எனவே, அங்கு பூஜை உள்ளிட்ட சடங்குகளை மேற்கொள்ளவும் அதற்கு யாரும் இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்றும் உத்தரவிட வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டப்பிரிவு 25ன் கீழ் குடிமக்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட மதத்தின் அடிப்படை உரிமையை உ.பி அரசும், அதிகாரிகளும் மீறுகின்றனர். ஹிந்துக்களின் மத உரிமையைத் தடுக்கவும் தடைவிதிக்கவும் அவர்களுக்கு எந்த உரிமையும் அதிகாரமும் இல்லை. இந்த தெய்வங்களின் உருவங்களை இடிக்கவோ, சேதப்படுத்தவோ, அழிக்கவோகூடாது என பிரதிவாதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும் எனக்கூறி, ஒரு மனுவினை ராக்கி, லட்சுமி, சீதா, மஞ்சு, ரேகா ஆகிய ஐந்து பெண்கள், வாரணாசி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், உத்தரபிரதேச அரசு, காசி விஸ்வநாதர் கோவிலின் அறங்காவலர் குழுவினர் இதற்கு பதில் அளிக்க உத்தரவிட்டுள்ளது.

# பாரதத்தில் தங்கியிருந்த தலிபான்கள்



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானை துப்பாக்கி முனையில் கைப்பற்றிய பயங்கரவாத அமைப்பான தலிபானின் ஏழு மூத்த தலைவர்களில் ஒருவரான ஷெர் முகமது அப்பாஸ் ஸ்தானிக்ஜாய் என்பவர், தன் 20வது வயதில், ஆப்கன் ராணுவத்தின் சார்பில் உத்தரகண்டின் டேராடூனில் உள்ள நமது பாரத ராணுவ அகாடமியில் பயிற்சி எடுத்துள்ளார் என்பது தற்போது தெரிய வந்துள்ளது. இவர், 1996ல் ஆப்கன் ராணுவத்தில் இருந்து விலகி, தலிபான் அமைப்பில் இணைந்துள்ளார். இதேபோல, கடந்த 2010ல் 6 மாத கால சுற்றுலா விசாவில் பாரதம் வந்த ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த நூர் முகமது என்ற அஜிஸ் முகமது, நாக்பூரில் 10 ஆண்டுகள் சட்டவிரோதமாக தங்கியிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அவரது அகதி அந்தஸ்துக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. பின்னர் அவர் கைது செய்யப்பட்டு இங்கிருந்து ஜூன் 23, 2020ல் ஆப்கனுக்கு நாடு கடத்தப்பட்டார். இவர் அங்கு தலிபான் பயங்கரவாத அமைப்பில் இணைந்துள்ளது அங்கிருந்த வந்த புகைப்படங்கள் மூலம் உறுதியாகி உள்ளது.

# இங்கிலாந்து பாராட்டு



விஜயபாரதம்

பாரதத்திற்கான இங்கிலாந்து தூதர் அலெக்ஸ் எல்லிஸ், முதல்வர் யோகி ஆதித்யநாத்தை அவரது இல்லத்தில் சந்தித்து பேசினார். அப்போது அவர், கொரோனா தொற்றை மிக சிறப்பாக உ.பி அரசு கையாண்டதைப் பாராட்டினார். மேலும், பெண் குழந்தைகள் கல்வி, பெண்களுக்கு தன்னம்பிக்கை, அதிகாரமளித்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதில் மாநில அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள், உற்பத்தி பொருளாதாரத்தை அதிகரிக்க ‘ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு’ என்ற முன்னோடி திட்டம், வாரணாசி வளர்ச்சித் திட்டங்கள் உள்ளிட்டவற்றையும் பாராட்டினார். இங்கிலாந்தும், உ.பி.யும் உயர்கல்வித் துறை உள்ளிட்ட பல துறைகளில் இணைந்து செயல்படும் ஆர்வத்தையும் அவர் முன் வைத்தார்.

# டெஸ்லா பாட்



விஜயபாரதம்

விண்வெளி, ஆட்டோமொபைல் துறையில் பல புதுமைகள் புரிந்த எலான் மஸ்க்கின் டெஸ்லா நிறுவனம் அடுத்ததாக மனித உருவிலான ரோபோவைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்கி உள்ளார். 'டெஸ்லா பாட்' எனப்படும் இந்த ரோபோ, மனிதர்களுக்கு சேவை செய்ய ஏற்ற வகையில் தயாரிக்கப்படுகிறது. 57 கிலோ எடை, 5.8 அடி உயரம் கொண்ட இந்த ரோபோ, உடல் உழைப்புத் தேவைப்படும் பணிகள், வீட்டுப் பணிகள், ஆபத்து மிக்கப் பணிகளில் பயன்படுத்தும் வகையில் தயாரிக்கப்படும். இது அடுத்த ஆண்டேகூட அறிமுகம் ஆகலாம் என கூறப்படுகிறது.

# ஏவுகணை தயாரிப்பு நிறுவனம்




விஜயபாரதம்

மேக் இன் இந்தியா மற்றும் ஆத்மநிர்பர் பாரத் திட்டத்தின் கீழ், மேம்பட்ட குறுகிய தூர வானில் இருந்து வான் இலக்குகளை தாக்கும் குறுகிய தூர அஸ்ரேம் (ASRAAM) ஏவுகணையை தயாரிக்க மத்திய அரசுக்கு சொந்தமான பாரத் டைனமிக்ஸ் நிறுவனம் (பி.டி.எல்) இங்கிலாந்தை சேர்ந்த MBDA நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. தெலங்கானாவின் பானூரில் இதற்கான தொழிற்சாலை நிறுவப்படும். 2023க்குள் இந்த நிறுவனம் உற்பத்தியைத் துவங்கும். பாதுகாப்பு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும், பி.டி. எல் நமது ஆயுதப் படைகள், நட்பு நாடுகளுக்கு பல்வேறு வகையான ஏவுகணைகள், டார்ப்பிடோக்களை தயாரித்து வருகிறது.

# பாகிஸ்தானில் கொல்லப்படும் சீனர்கள்



விஜயபாரதம்

பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் ஷியா முஸ்லிம்களின் ஊர்வலம் நடைபெற்றது. அப்போது அந்தப் பக்கமாக சென்ற சீனர்களின் வாகனத்தை குறிவைத்து தற்கொலைப்படைத் தாக்குதல் நடைபெற்றது. இதில், பொதுமக்கள் 30 பேர் காயமடைந்தனர் 5 பேர் உயிரிழந்தனர். வாகனத்தில் பயணித்த ஒரு சீனரும் ஓட்டுனரும் காயம் அடைந்தனர். பஹாவல்நகர் மாவட்டத்தின் சிறைச்சாலை அருகே பாதுகாப்பு நிறைந்த இடத்தில் இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது என்பதும் சீனரகளின் பாதுகாப்பிற்காக உடன் ராணுவ வாகனம் வந்ததும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் அரசு சீனவிடம் நெருங்கிய நட்புப் பாராட்டி வந்தாலும், உய்குர் முஸ்லிம்கள் மீதான சீனர்களின் அடக்குமுறை, பாகிஸ்தானியர்களின் வேலைவாய்ப்பு பறிப்பு, பாகிஸ்தானிலேயே பாகிஸ்தான் தொழிலாளர்களை கேவலமாக நடத்துவது உள்ளிட்ட காரணங்களால் அங்கு சீனர்கள் மீது அடிக்கடி தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த மாதம், தாசு நீர் மின் திட்டத்தில் நடந்த பேருந்து வெடிப்பில் ஒன்பது சீனர்கள் உட்பட 13 பேர் கொல்லப்பட்டனர். இதனால், சீன நிறுவனம் இன்னும் அங்கு தன் வேலையைத் தொடங்க தயக்கம் காட்டி வருகிறது.

# ஆப்கனில் இந்தியர்கள்




விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் உள்ள இந்தியர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்கின்றனர். அவர்கள் விரைவில் மீட்கப்படுவார்கள் என தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அங்குள்ள சீக்கியர்கள், ஹிந்துக்கள், கல்வியாளர்கள், பத்திரிகையாளர்கள் என பலர் சிறு சிறு குழுக்களாக கல்வி நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடுகள் என 200க்கும் மேற்பட்டோர் பல இடங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர் என கூறப்படுகிறது. நேற்று சி130 ஜெ விமானம் மூலம் 85 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், சகி தர்யாபி என்ற ஆப்கனை சேர்ந்த ஒரு உள்ளூர் பத்திரிகையாளர், சமீபத்தில் 150 இந்தியர்கள் கடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். 'விமான நிலையம் சென்ற அவர்களை மற்றொரு வாயில் வழியாக அழைத்துச் செல்வதாகக் கூறி தலிபான்கள் அழைத்துச் சென்றனர். அவர்கள் உண்மையில் உள்ளே அழைத்து செல்லப்பட்டார்களா அல்லது கட்த்தப்பட்டார்களா என தெரியவில்லை' என கூறியுள்ளார். இதனை தலிபான்கள் மறுத்துள்ளனர்.

# வலையில் சிக்கிய மீம்கள்




புதிய தலைமுறை
BREAKING NEWS
வடசென்னை அனல் மின் நிலையத்தில் 2.38 லட்சம் டன் நிலக்கரியை காணவில்லை
அனல் மின் நிலைய பதிவேட்டில் இருக்கிறது; ஆனால் இருப்பில் நிலக்கரியை காணவில்லை
- அமைச்சர் செந்தில் பாலாஜி
20/08/2021
True or False
அணில் தூக்கிட்டு போயிருக்கும்


Education
Digitalisation
Education VS Digitalisation!

# ரக்ஷாபந்தன்



விஜயபாரதம்

சகோதர சகோதரிக்கிடையேயான உறவு பந்தத்தை பலப்படுத்தும் பண்டிகையாக, புதிய சகோதரத்துவத்தை வளர்க்கும் பண்டிகையாகக் கொண்டாடப்படுவது 'ரக்ஷாபந்தன்'. இத்திருநாளில், சகோதரிகள் தங்கள் சகோதரர்களுக்கு இனிப்புகள் வழங்கி கையில் ஒரு மங்களகரமான கயிறைக் கட்டுவர். சகோதரர்களும், தங்களது பாசத்தை தெரிவிக்கும் விதமாக அவர்களுக்குப் பரிசுகளை வழங்குவர். ரக்ஷா பந்தன் என்றால் 'பாதுகாப்பு பந்தம்' என்றும் பொருள். இந்த விழா, தீய விஷயங்களிடமிருந்து சகோதரர்களைக் காப்பாற்றவும், அவர்களது நல்வாழ்வு, நீண்ட ஆயுளுக்காக சகோதரிகள் பிரார்த்தனை செய்வதற்காகவும் கொண்டாடப்படுகிறது.

ரக்ஷா பந்தன் பண்டிகைக்குத் தொடர்பாகப் பல கதைகள் உள்ளன.

பாண்டவர்களின் மனைவியான திரௌபதி, போர்க்களத்தில் பகவான் கிருஷ்ணனுக்கு காயத்தால் வடிந்த இரத்தத்தைத் தடுக்க, தனது புடவையின் ஒரு பகுதியைக் கிழித்து, கிருஷ்ணனின் மணிக்கட்டில் கட்டினார். இந்நிகழ்வால், கிருஷ்ண பரமாத்மாவின் திரௌபதியைத் தனது சகோதரியாக ஏற்றுக் காத்தார். சூதாட்டத்தில் கௌரவர்களிடம் பாண்டவர்கள் தோற்றதால்,'சிர் ஹரன்' நேரத்தில் திரௌபதியின் மானம் காத்தார்.

மற்றொரு கதையாக, சித்தூர் ராணி கர்ணாவதி, தனது அரசாட்சியைப் பேரரசர் பகதூர் ஷா கைப்பற்ற போகிறான் என்றுணர்ந்து, பேரரசர் ஹுமாயுனுக்கு ராக்கிக்கயிறை அனுப்பினார். இதனால், ஹுமாயுன், ராணியையும், அவரது ராஜ்ஜியத்தைக் காக்க முற்பட்டார். ஆனால், அதற்குள் ராணியை போரில் வென்றான் பகதூர் ஷா.

மற்றொரு புராணத்தின் படி, பகவான் விஷ்ணு, தன் பக்தன் பாலியின் வேண்டுகோளுக்கு இணங்க, வைகுண்டத்தை விட்டு வந்து பலியின் ராஜ்ஜியத்தைப் பாதுகாத்தார். விஷ்ணு வரும்வரை தனது இருப்பிடத்திற்குத் திரும்ப விரும்பாத லட்சுமி தேவி, ஒரு சாதாரணப் பெண் வேடம் பூண்டு, தனது கணவர் வரும்வரை அடைக்கலம் தேடி அலைந்தார். ஷ்ரவன் பூர்ணிமா தினத்தில் லட்சுமி தேவி, ராஜா பாலியின் கையில் 'ராக்கி' எனும் புனிதக்கயிறைக் கட்டினார். ராஜா, அப்புனிதக் கயிறைக் கட்டியதற்கான நோக்கத்தைக் கேட்டபோது, அவர் தனது உண்மை ரூபத்தை வெளிப்படுத்தினார். இதனால், இறைவனுக்காகவும் அவரது அன்பான மனைவி லட்சுமிக்காகவும் தனது அனைத்து செல்வங்களையும் தியாகம் செய்தார் பாலி. பகவானிடம் ராஜா பாலி கொண்ட அதீதப் பற்றை அனைவரும் அறியும் விதமாக, இவ்விழா 'பாலிவா' என்றும் அழைக்கப்படுகிறது.

# சமஸ்கிருதம் ஒரு பார்வை




விஜயபாரதம்

தமிழகத்தைப் பொருத்தவரை தமிழ், ஆங்கிலம் தவிர வேற்று மொழிகளுக்கு கல்வி, அரசியல் சமூக தளங்களில் பங்கு மிகக் குறைவே. இத்தனைக்கும் அண்டை மாநில மொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட மொழிகளைப் பேசுபவர்கள் இங்கு அதிகம். ஆயினும், எதிர்மறையாக மற்ற மொழிகளைக் குறித்து ஏளனமும் வெறுப்பும் செய்பவர்களே பாமர மக்களிடம் செல்வாக்கு உள்ளது நமது துரதிருஷ்டம். இது சமீபத்தில் முளைத்த திராவிட அரசியலால் வந்த விளைவுதான் என்பதை மறுப்பதற்கில்லை. இதனால், சமஸ்க்ருதம் போன்ற பாரதத்தின் புராதன மொழிகளிடமிருந்து தமிழர்கள் விலகியுள்ளது போன்ற தோற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அகண்ட பாரதம் எங்கும் பொதுவான ஒரு மொழியாகவே பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்த சமஸ்க்ருதம் பின்னர் கடந்த சில நூற்றாண்டுகளில் அரசாங்க மொழி, பேச்சு மொழி என்ற பயன்பாடுகள் குறைந்து வெறும் சடங்கு மொழியாக ஆகிவிட்டது என்ற கருத்து நிலவுகிறது. ஆனால், சமஸ்க்ருத மொழியின் இன்றைய நிலை என்ன, இது செத்த மொழியாக, சடங்கு மொழியாகத்தான் இருக்கிறதா? இணையம் போன்ற தொழில்நுட்பங்கள் பெருகிவிட்டவருங்காலத்தில் சமஸ்க்ருதத்தின்ன நிலை என்ன?

புராதன காலம்தொட்டே சமஸ்க்ருதம் தமிழர்களுக்கு அன்னிய மொழி அல்ல. இன்றைய பாரதத்தில் ஆங்கிலம் எந்த அளவு அரசாங்கம் மற்றும் பொது மொழியாக உள்ளதோ, அந்த அளவுக்கு சமஸ்க்ருதம் முன்பு அனைவருக்குமான ஒரு பொதுமொழியாகவே இருந்துள்ளது என்பதற்கு, சோழர்கால செப்பேடுகள், காளிதாசன் நாடகங்கள், ஆதிசங்கரர் வாழ்க்கை என பல்லாயிரம் நிரூபணங்கள் உள்ளன.

எத்தனையோ ஹிந்து மத நூல்கள் சமஸ்க்ருதத்தில் இருந்தாலும், இம்மொழி ஹிந்து மதத்திற்கு மட்டுமே சொந்தமானதாகக் கருதப்படவில்லை. ராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாச காவியங்கள், வேதங்கள் மட்டும் அல்ல, பௌத்த, ஜைன மத நூல்களும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டு உள்ளன.அது தேவர்கள் மட்டுமே பேசும் மொழி என்று என்றைக்குமே உயர்வு சொல்லி ஒதுக்கி வைக்கப்படவில்லை.

முகலாயர் ஆட்சிக் காலத்தில், அரபி சமஸ்கிருத அகராதிகள், அல்லோபநிஷத் போன்ற இஸ்லாமிய நூல்கள் உருவாகின. முன்னூறு ஆண்டுகளுக்கு முன் மொழிபெயர்க்கப்பட்ட சமஸ்க்ருத பைபிள்கூட இருக்கிறது.

மாக்ஸ் முல்லர் போன்ற மேற்கத்திய மொழியியலாளர்களால் முன்வைக்கப்பட்ட மொழி ஆராய்ச்சிகளில் ஐரோப்பிய மொழிகளுக்கும் சமஸ்கிருதத்துக்கும் தொடர்பு உண்டு என்று கூறப்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் ஏராளமான சமஸ்கிருத நூல்கள் ஆங்கிலம், ஜெர்மன், இத்தாலி, பிரெஞ்சு, ஜப்பான் போன்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. நமது நாட்டுக்கே உரிய மொழி இன்று உலகெங்கும் பலராலும் படிக்கப்பட்டும், மொழிபெயர்க்கப் பட்டும் சிலாகிக்கப்பட்டும் வருகிறது.

அது மட்டும் இல்லாமல், நாம் தமிழ் என நினைத்து அன்றாடம் பயன்படுத்தும் வார்த்தைகளில் பலவும் சமஸ்கிருதம்தான். தமிழகத்தில் உள்ள ஹிந்துக்களின் பெயர்களில் 60 சதவீதத்திற்கும் அதிகம் சமஸ்கிருதமே. சமஸ்கிருதத்தை வளர்க்க உள்ள சமஸ்கிருத பாரதி, சமஸ்கிருத கல்லூரி, வேதபாட சாலைகள், ஆயுர்வேத மருத்துவ படிப்புகள் என அனைத்திலும் இன்றுவரை சமஸ்கிருதம் படித்து பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில் மட்டுமே 20 லட்சத்தைத் தாண்டும். மாற்று மொழி மீது வெறுப்புக்கொண்ட தமிழகத்தில் மட்டுமே இப்படி என்றால் மொத்த பாரதத்திலும்? உண்மை நிலை இப்படி இருக்கையில் சமஸ்கிருதம் எப்படி இறந்த மொழியாகும்? சமஸ்கிருதம் இன்றும் உயிர்ப்புடன் இருக்கிறது. நன்றாக வளர்ந்து வருகிறது, வருங்காலத்தில் மீண்டும் அதன் உன்னத நிலையை எட்டும் என்ற நம்பிக்கையும் உள்ளது என்பதே உண்மை.

இன்று உலக சமஸ்கிருத தினம்

சங்கீதா சரவணகுமார்


**விஜயபாரதம் தேசிய வார இதழ்**

**சந்தா செலுத்த / புதுப்பிக்க**

**www.vijayabharatham.org**

**என்ற இணையதளம் அல்லது**

**044 - 26420870 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும் .**

**93613 99006**